
# வீட்டில் இருக்கும்போதும் எண்ணிப் பழகலாமே!





அன்றாட வாழ்க்கையில் கணக்குக் கற்றுக்கொள்ள நமக்குக் கிடைக்கும் வழிகளைக் கண்டறிந்து அவற்றைப் பற்றிப் பேசுவதற்கு இந்த விளையாட்டான நடைமுறைக்கு ஏற்ற யோசனைகளை முயற்சி செய்து பாருங்கள்.

**உங்கள் குழந்தையுடன் இப்படி விளையாட ஆரம்பிப்பதற்கான சில யோசனைகள் இதோ!**


- மதிய உணவைத் தயார் செய்யும்போது ரொட்டித் துண்டுகளை பாதியாகவும், கால் பகுதியாகவும், முக்கோண வடிவிலும் வெட்டுவது எப்படி என்று கேளுங்கள். வெட்டிய பிறகு ‘எத்தனைத் துண்டுகள் இருக்கின்றன?’ என்று கேளுங்கள்.







- சமைக்கும்போது குழந்தையை உடன் இருக்கச் சொல்லுங்கள். சமையலுக்குப் பயன்படுத்தும் பொருட்களின் அளவு எவ்வளவு, எவ்வளவு நேரம் எடுக்கிறது வெப்பநிலைகள் என்ன என்பதைப் பற்றிக் குழந்தையுடன் பேசுங்கள்.



- தொட்டியில் குளிக்கும்போது கோப்பைகளில் தண்ணீரை அளந்து நிரப்பச் சொல்லி விளையாடுங்கள். ‘எந்த பொம்மைகள் தண்ணீரில் மூழ்குகின்றன? எந்த பொம்மைகள் மிதக்கின்றன?’ என்று கேளுங்கள்.

Tamil

**அன்றாட வாழ்க்கையில் நம் கண்ணில் படும் கணக்கு சம்பந்தப்பட்ட விடயங்களைப் பற்றி யோசித்துப் பார்த்து அவற்றைப் பற்றிப் பேசுங்கள்!**

thesmithfamily.com.au

The Smith Family
Learn today, change tomorrow.


# வீட்டில் இருக்கும்போதும் எண்ணிப் பழகலாமே!




## வீட்டில் கணக்குக் கற்றுக் கொள்வதற்கு இன்னும் சில விளையாட்டான வழிகள்.

- துணி துவைக்கும்போது குழந்தையை உதவச் சொல்லுங்கள். ஒவ்வொருவருடைய உடுப்புகளையும் வகைப்படுத்தச் சொல்லுங்கள்.







- அளவுநாடாவைப் பயன்படுத்தி குழந்தையின் உயரத்தைக் கண்டுபிடியுங்கள். ‘குடும்பத்தில் யார் மிகவும் உயரமானவர்? யார் மிகவும் உயரம் குறைந்தவர்?’ என்று கேளுங்கள்.



- ‘தோட்டத்தில் இருக்கும் பொருட்கள் என்ன?’ என்று கேளுங்கள். வெவ்வெறு வடிவங்கள், அளவுகள் மற்றும் எடைகள் உள்ள பொருட்களைப் பார்த்து அவற்றுடன் விளையாடுங்கள்.



- ‘ப்ளாக்’ மற்றும் ‘டோமினோ’ ஆகியவற்றை வைத்து விளையாடி அளவுகள் மற்றும் வடிவங்களைப் பற்றிக் குழந்தையுடன் பேசுங்கள்.

**அன்றாட வாழ்க்கையில் நம் கண்ணில் படும் கணக்கு சம்பந்தப்பட்ட விடயங்களைப் பற்றி யோசித்துப் பார்த்து அவற்றைப் பற்றிப் பேசுங்கள்!**

Tamil

thesmithfamily.com.au


The Smith Family
Learn today, change tomorrow.

# வாங்க, கணக்குப் பழகலாம்!

அன்றாட வாழ்க்கையில் கணக்குக் கற்றுக்கொள்ள நமக்குக் கிடைக்கும் வழிகளைக் கண்டறிந்து அவற்றைப் பற்றிப் பேசுவதற்கு இந்த விளையாட்டான நடைமுறைக்கு ஏற்ற யோசனைகளை முயற்சி செய்து பாருங்கள்.

**உங்கள் குழந்தையுடன் இப்படி விளையாட ஆரம்பிப்பதற்கான சில யோசனைகள் இதோ!**

- வெளியே இருக்கும்போது மணல் மற்றும் தண்ணீருடன் விளையாடுங்கள். இப்படி விளையாடும் போது அளவுகோல்கள் மற்றும் வெவ்வேறு கனஅளவுகளைக் கொண்ட கலன்களைப் பயன்படுத்தி அளப்பது எப்படி என்று குழந்தைக்குக் கற்றுக்கொடுங்கள்.






- பூங்காவில் விளையாடும்போது ‘உயரம்’, ‘நீளம்’, ‘தூரம்’, ‘வடிவங்கள்’ ஆகியவற்றைப் பயன்படுத்தி குழந்தையுடன் விளையாடுங்கள். ‘சதுரம்’, ‘வட்டம்’ போன்ற வடிவங்கள் எங்கேயாவது தெரிகிறதா என்று குழந்தைகளைக் கேளுங்கள்.

- வாகனத்தில் போகும்போது, ‘தூரம்’, ‘வேகம்’ ஆகியவற்றைப் பற்றிப் பேசுங்கள். ‘எவ்வளவு தூரம்?’ ‘எவ்வளவு வேகம்?’ ‘எவ்வளவு நேரம்?’ என்று குழந்தைகளைக் கேளுங்கள்.






**அன்றாட வாழ்க்கையில் நம் கண்ணில் படும் கணக்கு சம்பந்தப்பட்ட விடயங்களைப் பற்றி யோசித்துப் பார்த்து அவற்றைப் பற்றிப் பேசுங்கள்!**

Tamil

thesmithfamily.com.au

The Smith Family
Learn today, change tomorrow.

# வாங்க, கணக்குப் பழகலாம்!


## வீட்டுக்கு வெளியே கணக்குக் கற்றுக் கொள்ள உதவும் வேடிக்கையான வழிகள்.

- கடைக்குப் போகும்போது கணக்கைப் பற்றி யோசியுங்கள். தராசைப் பயன்படுத்தி வெவ்வெறு எடைகளை அளந்து பாருங்கள், மற்றும் வெவ்வேறு வடிவங்கள் மற்றும் நிறங்களைப் பற்றி யோசியுங்கள்.

  ‘பெரிய ஆப்பிள் பழங்கள் இரண்டை உன்னால் எடுக்க முடியுமா?’ ‘எதற்கு எடை அதிகம்: ஆப்பிள் பழத்திற்கா அல்லது ஆரஞ்சுப் பழத்திற்கா?’


  ‘தள்ளுவண்டியில் என்ன இருக்கிறது?’ என்று கேளுங்கள். அளவு, நிறம், வடிவம் ஆகியவற்றிற்கு ஏற்ப பொருட்களை வகைப்படுத்துமாறு குழந்தைக்குச் சொல்லுங்கள்.

  நடக்கும் போது காலடிகளை எண்ணுங்கள். குறிப்பிட்ட இடம் ஒன்றிற்கு நடக்கும்போது, அதாவது





- போன்ற இடங்களுக்குச் செல்ல ‘எத்தனை அடிகள் நடக்க வேண்டும்?’ என்று கேளுங்கள்




**அன்றாட வாழ்க்கையில் நம் கண்ணில் படும் கணக்கு சம்பந்தப்பட்ட விடயங்களைப் பற்றி யோசித்துப் பார்த்து அவற்றைப் பற்றிப் பேசுங்கள்!**

thesmithfamily.com.au

The Smith Family
Learn today, change tomorrow.

Tamil